**OS.No.44/2023, Dated 08.07.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 8th day of July 2025..

**வா.சா.1 - முருகன் த/பெ. முனுசாமி வரவழைக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 1957 ஆவணத்தை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தான 11 செண்ட் நிலத்தை முருகேச கவுண்டருக்கு செல்லப்ப நாயக்கரும் அவரது குமாரரும் எழுதிக்கொடுத்தார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். முருகேச கவுண்டருக்கு 2 மகன்கள் என்றாலும், அதில் ஒருவர் ஏழுமலை என்றால் சரிதான். ஏழுமலையுடன் பிறந்தவர் நடேச கவுண்டர் என்றால் சரிதான். அவர்களிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையின் நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை நான் பார்த்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா சொத்து ஏழுமலை கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. ஏழுமலை கவுணடரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்பது தான் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கு என்றால் அது தவறாகும். தாவா சொத்திற்கான முந்தைய பத்திரமாக 1972 வருடத்திய பத்திரத்தை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால சரிதான். 1972 பத்திரத்தின்படி பரசுராமன் மகன் முனுசாமிக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1957 ஆவணப்படி முருகேச கவுண்டர் கிரையம் வாங்கி அவருடைய வாரிசுகளிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் அது தவறாகும். 1972 ஆவணப்படி ஏழுமலைக்கு கிரையம் கொடுப்பதற்கு பரசுராமன் மகன் முனுசாமிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அந்த கிரையத்தை அனுசரித்து பின்னிட்டு ஏற்பட்ட கிரையங்கள் செல்லாது என்றால் சரியல்ல. அந்த கிரைய பத்திரங்கள் பேருக்கு தான் எழுதப்பட்டவை என்றாலும், இன்று வரை தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் எனது

தகப்பனாருடன் தான் வேலை செய்து வந்தேன். பட்டா மாற்றுவதற்க 1ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்தபோது அந்த நடவடிக்கைகளுக்கு நான் உடன் சென்றேனா என்றால் சென்றேன். வட்டாட்சியரிடம் எனது தந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றாலும், அப்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். வட்டாட்சியரிடம் எனது தந்தை தனக்கு 52 செண்ட் சொந்தம் என்று அது போக மீதம் உள்ள சொத்தில் தான் உரிமைக்கோரவில்லை என்று கூறினார் என்றால் சரிதான். எனது தந்தை 52 செண்ட் போக மீதம் இடத்திற்கு 1ம் பிரதிவாதிக்கு பட்டா கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று சொன்னதால்தான் 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது தவறாக வழங்கப்பட்டது. எனது தகப்பனாரே அவருடைய உரிமைக்கு அதிகமாக சொத்து உள்ளதாக குறிப்பிட்ட பின்னிட்டு நான் அவசியமில்லாமல் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 1957 லிருந்தே சொத்தானது 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், தவறான ஆவணங்களின் அடிப்படையில் நான் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் வழக்கு சொத்து சம்பந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இன்று வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.07.08 16:50:37 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.